# BHARATHANATYAM - 1

Renucka Dushianthan



Thayanjaly Natya Kala Mandir

N DISTRIBUTORS ★ 222 5542
No: 212
ROAD

# பரத நாட்டியம் - 1

ரேணுகா துஷ்யந்தன்

## பரதநாட்டியம் - I

| | |
|---|---|
| ஆசிரியர் | : திருமதி. ரேணுகா துஷ்யந்தன் |
| முகவர் | : தயாஞ்சலி நாட்டிய கலா மந்திர்<br>43/8, கொட்டாஞ்சேனை வீதி,<br>கொழும்பு - 13, இலங்கை. |
| தொ.பே | : 011-2335330, 077 6175898 |
| முதலாம் பதிப்பு | : ஐப்பசி 2000 |
| இரண்டாம் பதிப்பு | : வைகாசி 2003 |
| மூன்றாம் பதிப்பு | : ஐப்பசி 2004 |
| நான்காம் பதிப்பு | : பங்குனி 2007 (திருத்தப்பட்டது) |
| ஐந்தாம் பதிப்பு | : புரட்டாதி 2008 |
| ஆறாம் பதிப்பு | : ஆவணி 2009 |
| ஏழாம் பதிப்பு | : கார்த்திகை 2010 |
| எட்டாம் பதிப்பு | : சித்திரை 2012 |
| ஒன்பதாம் பதிப்பு | : மார்கழி 2012 |
| பத்தாம் பதிப்பு | : ஆனி 2015 |
| அச்சுப் பதிப்பு | : தேவி அச்சகம்<br>இல. 41, கன்னாரத்தெரு,<br>கொழும்பு - 13.<br>0112 434534 |
| விலை | : ரூபா 375/- |

## BHARATHANATYAM - I

| | |
|---|---|
| Author | : Mrs. Renucka Dushianthan |
| Address | : Thayanjaly Natya Kala Mandir<br>43/8, Kotahena Street,<br>Colombo 13. Sri Lanka. |
| Telephone | : 011-2335330, 077 6175898 |
| E-mail | : renucka@yahoo.com |
| First Edition | : October 2000 |
| Second Edition | : May 2003 |
| Third Edition | : October 2004 |
| Fourth Edition | : March 2007 |
| Fifth Edition | : September 2008 |
| Sixth Edition | : August 2009 |
| Seventh Edition | : November 2010 |
| Eighth Edition | : April 2012 |
| Ninth Edition | : December 2012 |
| Tenth Edition | : June 2015 |
| Copyright | : © The Author |
| ISBN No. | : ISBN 978-955-50166-0-5 |
| Printed By | : Devi Printers<br>No. 41, Brassfounder Street,<br>Colombo 13.<br>0112 434534 |
| Price | : Rs. 375/- |

**வட இலங்கை சங்கீதசபை பரீட்சார்த்திகளுக்கும்**
**ஆண்டு 6 தொடக்கம் 11 வரையான**
**மாணவர்களுக்கும் உகந்தது.**

# முன்னுரை

இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு ஏனைய பாடங்களைப் போன்று நாட்டியக் கல்விக்கான நூல் இல்லாமையால் ஏற்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்த நூலை வெளியிடும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இந்நூலானது வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்கு அமைவாகவும், ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான பாடசாலையில் நடனம் கற்கும் மாணவர்கள் பயன்படுத்தக் கூடியவாறும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பயன்படுத்தி மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவார்களேயானால் அதுவே இந்நூலிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இந்நூலை தயாரிக்க உதவிய என்னுடைய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும், அச்சிட உதவிய லக்ஷ்மி பதிப்பகத்தாருக்கும் இத்தால் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் தயாரிக்கும் எண்ணத்தை என்னுள் விதைத்த இறைவனுக்கும், இதனைத் தயாரிக்கும் அளவுக்கு எனக்கு அறிவூட்டிய ஆசிரியர்களுக்குமே இந்நூல் சமர்ப்பணம்.

நன்றி

திருமதி. ரேணுகா துஷ்யந்தன்
இயக்குனர், ஆசிரியை,
தயாஞ்சலி நாட்டிய கலா மந்திர்
கொட்டாஞ்சேனை

## பொருளடக்கம் பக்கம்

### ☞ தரம் 01 - அறிமுறை *(Theory)*


1. குரு ஸ்லோகம் 01
2. த்யான ஸ்லோகம் 02
3. அஸம்யுத ஹஸ்தங்கள் 03
4. ஸம்யுத ஹஸ்தங்கள் 05
5. நமஸ்காரத்தின் முக்கியத்துவம் 07
6. நாட்டியத்தின் இலட்ஷணங்கள் 08


### ☞ தரம் 02 - அறிமுறை *(Theory)*


1. அஸம்யுத ஹஸ்த விநியோகங்கள் 10
2. ஸம்யுத ஹஸ்த விநியோகங்கள் 31
3. அபூர்வமுத்திரைகளும் அதன் விநியோகங்களும் 40
4. நாட்டியத்தின் உட்பிரிவுகள் 42
5. வரைவிலக்கணங்கள் 44
   (i) அடவு
   (ii) கோர்வை
6. உருப்படிகளின் இலட்ஷணங்கள் 46
   (i) அலாரிப்பு
   (ii) ஜதிஸ்வரம்
7. சங்கீதம் எழுதும் முறையில் உபயோகிக்கும் குறியீடுகள் 48
8. அரங்க தேவதா ஸ்துதி 50
9. புஷ்பாஞ்சலி 51


### ☞ தரம் 01 - செய்முறை *(Practical)*


1. பந்தணை நல்லூர் பாணியிலான அடவு விபரம் 52
2. அடவுகளின் தாள அட்டவணை 54

## ☞ தரம் 02 – செய்முறை *(Practical)*


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அலாரிப்பு | - | தாளக்குறிப்பு | 66 |
| 2. | ஜதிஸ்வரம் | - | வஸந்தா பாடல் | 67 |
| 3. | ஜதிஸ்வரம் | - | வஸந்தா தாள அட்டவணை | 68 |
| 4. | ஜதிஸ்வரம் | - | சாவேரி - பாடல் | 70 |
| 5. | ஜதிஸ்வரம் | - | சாவேரி - தாள அட்டவணை | 71 |


## ☞ தரம் 02 – மாதிரிவினாத்தாள்


1. மாதிரி வினாத்தாள் 1 — 73
2. மாதிரி வினாத்தாள் 2 — 75
3. மாதிரி வினாத்தாள் 3 — 79
4. மாதிரி வினாத்தாள் 4 — 82
5. மாதிரி வினாத்தாள் 5 — 85
6. மாதிரி வினாத்தாள் 6 — 88
7. விடைகள் — 91


## ☞ பிற்சேர்ப்பு


(i) நாட்டியத்தின் பெருமை — 94
(ii) உடலுக்கு நாட்டியத்தின் பயன்கள் — 95
(ii) நடனம் பயில விரும்பும் மாணவர்கள் — 96
(iv) பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள் — 97
(v) குருவிடம் சேரும் முறை — 98
(vi) அரங்கேற்றம் — 99

# தாரம் 1

## அறிமுறை

# குரு ஸ்லோகம்

**குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஸ்வரஹ /**
**குருர் சாஷாத் பரப் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ //**

கருத்து : குருவே பிரம்மன், குருவே விஷ்ணு, குருவே மஹேஸ்வரன்.
குருவே பரம்பொருள். அந்தக் குருவிற்கு நமஸ்காரம்.

# த்யான ஸ்லோகம்

**ஆங்கிகம் புவனம் யஸ்ய வாசிகம் ஸர்வ வாங்மயம் /**
**ஆஹார்யம் சந்த்ர தாராதி தம் நுமஸ் ஸாத்விகம் சிவம் //**

| *சமஸ்கிருதம்* | *தமிழ்* | *பயன்படுத்தும் முத்திரை* |
|---|---|---|
| ஆங்கிகம் | உடம்பு | ப்ராளம்பம் |
| புவனம் | உலகம் | ஸுசீ |
| யஸ்ய | யாருடைய | ப்ரளாம்பம் |
| வாசிகம் | வார்த்தைகள் | முகுளத்திலிருந்து அலபத்மம் |
| ஸர்வ | எல்லா | ஸுசீ |
| வாங்மயம் | மொழி | த்ரிலிங்கத்திலிருந்து சந்த்ரகலா |
| ஆஹார்யம் | ஆபரணம் | சதுரம் |
| சந்த்ர | சந்திரன் | அலபத்மம் |
| தாராதி | நட்சத்திரம் | காங்குலபேதம் |
| தம் | உம்மை | ஸுசீ |
| நுமஸ் | வணங்குதல் | அஞ்சலி |
| ஸாத்விகம் | பரிசுத்தமான | ஹம்ஸாஸ்யம் |
| சிவம் | சிவபெருமான் | சிவலிங்கம் |

**கருத்து** :-

யாருடைய உடம்பு உலகமாகவும், பேசும் வார்த்தைகள் எல்லா மொழிகளாகவும், ஆபரணங்கள் சந்திரன் நட்சத்திரங்களாகவும் திகழ்கின்றதோ அவரை அந்த பரிசுத்தமான சிவபெருமானை வணங்குவோமாக.

# அஸம்யுத ஹஸ்தங்கள்

**(ஒற்றைக்கை முத்திரைகள்)**

**பதாகஸ் த்ரிபதாகோ அர்தபதாகஹ் கர்தரீமுகஹ /**
**மயூராக்யோ அர்தசந்த்ரஸ்ச அராளஹ் சுகதுண்டகஹ //**
**முஷ்டிஸ்ச சிகராக்யஸ்ச கபித்தஹ் கடகாமுகஹ /**
**ஸூசீ சந்த்ரகலா பத்மகோஷஹ ஸர்பசிரஸ்ததா //**
**ம்ருகசீர்ஷ ஸிம்ஹமுகஹ காங்குலஸ்ச அலபத்மகஹ /**
**சதுரோ ப்ரமரஸ்சைவ ஹம்ஸாஸ்யோ ஹம்ஸபக்ஷகஹ //**
**ஸந்தம்சோ முகுளஸ்சைவ தாம்ரசூடஸ் த்ரிசூலகஹ /**
**இத்யஸம்யுத ஹஸ்தானாம் அஷ்டா விம்சதிரீரிதா //**

கருத்து:-

| | | | |
|---|---|---|---|
| 1. | பதாகம் | - | கொடி |
| 2. | த்ரிபதாகம் | - | மூன்று பாகங்கள் கொண்ட கொடி |
| 3. | அர்தபதாகம் | - | அரைக்கொடி |
| 4. | கர்தரீமுகம் | - | கத்தரிக் கோலின் அலகுகள் |
| 5. | மயூரம் | - | மயில் |
| 6. | அர்தசந்த்ரன் | - | அரைச்சந்திரன் |
| 7. | அராளம் | - | வளைந்தது |
| 8. | சுகதுண்டம் | - | கிளி மூக்கு |
| 9. | முஷ்டி | - | முட்டிக்கை |
| 10. | சிகரம் | - | உச்சி |
| 11. | கபித்தம் | - | விளாம்பழம் |
| 12. | கடகாமுகம் | - | வளையின் வாய் |
| 13. | ஸூசீ | - | ஊசி |

14. சந்த்ரகலா - பிறைச் சந்திரன்

15. பத்மகோசம் - தாமரை மொட்டு

16. ஸர்பசீர்ஷம் - பாம்பின் படம்

17. ம்ருகசீர்ஷம் - மான் தலை

18. ஸிம்ஹமுகம் - சிங்கத்தின் முகம்

19. காங்குலம் - அங்குலத்தைவிடக் குறைந்தது

20. அலபத்மம் - மலர்ந்த தாமரை

21. சதுரம் - சதுரம்

22. ப்ரமரம் - வண்டு

23. ஹம்ஸாஸ்யம் - அன்னத்தின் அலகு

24. ஹம்ஸபக்ஷம் - அன்னத்தின் சிறகு

25. ஸந்தம்சம் - இடுக்கி

26. முகுளம் - மொட்டு

27. தாமரசூடம் சேவல்

28. தரிசூலம் - சூலம்

# ஸம்யுத ஹஸ்தங்கள்

(இரட்டைக்கை முத்திரைகள்)

**அஞ்ஜலிஸ்ச கபோதஸ்ச கர்கடஸ் ஸ்வஸ்திகஸ்ததா /**
**டோலாஹஸ்த புஷ்பபுடஹ உத்ஸங்க சிவலிங்ககஹ //**
**கடகாவர்தனஸ்சைவ கர்தரீ ஸ்வஸ்திகஸ்ததா /**
**சகடம் சங்க சக்ரேச ஸம்புட பாஷ கீலகௌ //**
**மத்ஸ்ய கூர்மோ வராஹஸ்ச கருடோ நாகபந்தகஹ /**
**கட்வா பேருண்ட காக்யஸ்ச அவஹித்தஸ் ததைவச //**

**கருத்து:-**

| | | | |
|---|---|---|---|
| 1. | அஞ்சலி | - | வணக்கம் |
| 2. | கபோதம் | - | புறா |
| 3. | கர்கடம் | - | நண்டு |
| 4. | ஸ்வஸ்திகம் | - | குறுக்கிட்டது |
| 5. | டோலம் | - | ஊஞ்சல் |
| 6. | புஷ்பபுடம் | - | மலர்க்கூடை |
| 7. | உத்ஸங்கம் | - | அணைப்பு |
| 8. | சிவலிங்கம் | | சிவலிங்கம் |
| 9. | கடகாவர்த்தனம் | - | கோர்வையின் வளர்ச்சி |
| 10. | கர்தரீஸ்வஸ்திகம் | - | குறுக்கு கத்தரிக்கோல் |
| 11. | சகடம் | - | வண்டி |
| 12. | சங்கம் | - | சங்கு |
| 13. | சக்கரம் | - | சக்கராயுதம் |

14. ஸம்புடம் - பெட்டி
15. பாசம் - கயிறு
16. கீலகம் - பிணைப்பு
17. மத்ஸ்யம் - மீன்
18. கூர்மம் - ஆமை
19. வராகம் - பன்றி
20. கருடன் - கருடப் பறவை
21. நாகபந்தம் - பாம்பின் கட்டு
22. கட்வா - கட்டில்
23. பேருண்டம் - பேருண்டப் பறவை
24. அவஹித்தம் - குறுக்கே மலர்ந்த தாமரை



# நமஸ்காரத்தின் முக்கியத்துவம்

நாட்டியம் செய்யும் வேளையில் ஒருவர் முரசு அடிப்பவர் போல் இருக்கின்றார். அதேவேளையில் அவரது பாதங்கள் கழிகளாகவும் பூமி முரசாகவும் மாறுகின்றன. “பூமாதேவியே உன்னை என் பாதங்களால் ஓங்கி மிதிப்பதை நீ பொறுத்தருள வேண்டும்” என்று இறைவனை பிரார்த்திக்கும் நோக்குடனும் நாம் நடனம் ஆடும்போது எமக்குத் தெரியாமல் நிலத்தில் வாழும் உயிர்களுக்கு தீங்கு விளைவிப்பதற்கு மன்னிப்புக் கோரும் முகமாகவும் இந்த நமஸ்காரம், நாட்டியம் செய்ய ஆரம்பிக்கும் முன்பும், நாட்டியம் செய்து முடிந்த பின்பும் செய்யப்படுகின்றது. நமது நாட்டியம் இறைவனுக்கு உரியது என்பதால் இந்நாட்டிய வணக்கத்தை ஆரம்பத்தில் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நாம் ஆடும் நாட்டியம் இறைவனுக்குச் செலுத்தும் ஒருவகை காணிக்கை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நமஸ்காரம் செய்யும்போது ஆரம்பத்தில் மார்புக்கு முன் இரு கைகளிலும் கடகாமுக முத்திரை பிடித்து கால்களால் பூமி யில் இரு தட்டுத் தட்டி, பின் சிகர முத்திரைகளால் சுற்றிக் கொண்டு வந்து, சதுர முத்திரையினால் நிலத்தைத்தொட்டு கண்களில் ஒற்றி, இறுதியாக அஞ்சலி ஹஸ்தத்தை மார்புக்குமுன் பிடித்து எழுந்து நிற்கவேண்டும். இது முறையே குருவுக்கும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும், பூமாதேவிக்கும், சபையோருக்கும் வணக்கம் செலுத்துவதாக அமைகிறது.



# நாட்டியத்தின் இலட்ஷணங்கள்

நாட்டியத்தை அழகுபடுத்தும் அம்சங்களை நடனத்தின் இலட்ஷணங்கள் என்று கூறுகின்றோம்.

*அவையாவன :-* **1) பாவம்**

**2) இராகம்**

**3) தாளம்**

இவை மூன்றும் நாட்டியத்தின் இலட்ஷணங்களாகும்.

## பாவம்

மனித உள்ளத்தில் எழக்கூடிய உணர்ச்சிகள் பலவிதம். இவை அவரவர்களின் பால், வயது, மற்றும் சூழ்நிலைக்கேற்ற வண்ணம் வேறுப்படக்கூடியது. இவ்வாறு உணர்ச்சிகளை முகத்திலே வெளிக்காட்டி சபையோருக்கு நன்றாகப் புரியும்படி செய்து காட்டுதல் பாவம் எனப்படும். அதாவது கருத்துக்களை புலப்படுத்துதலும் உணர்ச்சிகளை நவரசங்களோடு அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்துதலும் பாவம் எனப்படும்.

## இராகம்

மனத்திற்கு இன்பம் கொடுக்கும் தொனிகளைக் கொண்டு கருத்துக்களை புலப்படுத்தும் ஒலிக்குறிப்பே இராகம் எனப்படும். **ஸ, ரி, க, ம, ப, த, நி** எனும் ஸப்த ஸ்வரங்களின் சேர்க்கையே இராகம் எனப்படும். இவ்வேழு ஸ்வரங்கள் சேர்ந்தே தாய் இராகங்கள் உற்பத்தியாகின்றன. இராகம் ரஞ்சனையானது. ஸ்வர சஞ்சாரிகளால் அழகு செய்யப்பட்டு கேட்போர் உள்ளத்தில் இனிப்பூட்டுவது. இது இனிமை என்பதை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

# தாளம்

தாளம் என்பது பாட்டின் காலப்பிரமாணத்தை அனுசரித்து கைகளினாலோ அல்லது கருவிகளினாலோ தட்டுதல் தாளம் எனப்படும். அதாவது காலத்தை அளந்து பிரித்து பாகுபாடு செய்வதே தாளம் எனப்படும். இந்தப் பிரிவுகள் சீராகவும், கால அளவு முறையுடனும் அமைவது தாளத்தின் லயமாகும். பூமி சுற்றுவது, கிரகங்களின் ஓட்டம், நம் இதயத்துடிப்பு அனைத்தும் தாளத்துடன் இயங்குகிறது.

தாளம் எனும் சொல்லின் 'த' என்ற எழுத்தும் 'ள' என்ற எழுத்தும் முறையே சிவபெருமானையும் பார்வதி தேவி யையும் குறிக்கிறது. ஆரம்ப காலத்தில் 108 தாளங்கள் உப யோகத்தில் இருந்தன. தற்போது ஏழு தாளங்களே பயன்படுத்தப் படுகிறது. இவை ஸப்த தாளங்கள் என அழைக்கப்படும்.



# தாம் 2

# அஸம்யுத ஹஸ்த விநியோகங்கள்



## 1) பதாக விநியோகஹ

நாட்யாரம்பே வாரிவாஹே வனே வஸ்துநிஷேதனே /
குசஸ்தலே நிஷாயாம்ச நத்யாம் அமரமண்டலே //
துரங்கே கண்டனே வாயௌ சயனே கமனோத்யமே /
ப்ரதாபேச ப்ரஸாதேச சந்த்ரிகாயாம் கனாதபே //
கவாட பாடனே ஸப்தவிபக்த்யர்தே தரங்ககே /
வீதி ப்ரவேசபாவேபி ஸமத்வேச அங்கராககே //
ஆத்மார்தே சபதே சாபி தூஷ்ணீம் பாவநிதர்ஷனே /
தாலபத்ரேச கேடேச த்ரவ்யாதி ஸ்பர்ஷனேததா //
ஆசீர்வாத க்ரியாயாம்ச ந்ர்பசிரேஷ்டஸ்ய பாவனே /
தத்ர தத்ரேதி வசனே ஸிந்தௌச ஸுக்ருதிக்ரமே //
ஸம்போதனே புரோகேபி கட்கருபஸ்ய தாரனே /
மாஸே ஸம்வத்ஸரே வர்ஷதினே ஸம்மார்ஜனேததா //
ஏவமர்தேஷு யுஜ்யந்தே பதாக ஹஸ்த பாவனாஹ /

கருத்து :-

| | | |
|---|---|---|
| நாட்யாரம்பே | - | நடனத்தின் ஆரம்பம் |
| வாரிவாஹே | - | முகில்கள் |
| வனே | - | காடு |
| வஸ்துநிஷேதனே | - | பொருட்களை மறுத்தல் |
| குசஸ்தலே | - | மார்பு |
| நிஷாயாம்ச | - | இரவு |
| நத்யாம் | - | நதி |
| அமரமண்டலே | - | தேவலோகம் |
| துரங்கே | - | குதிரை |
| கண்டனே | - | வெட்டுதல் |

| | | |
|---|---|---|
| வாயௌ | - | காற்று |
| சயனே | - | நித்திரை |
| கமனோத்யமே | - | முன்னேறுதல் |
| ப்ரதாபேச | - | புகழ்தல் |
| ப்ரஸாதேச | - | அநுக்கிரகம் |
| சந்த்ரிகாயாம் | - | நிலவொளி |
| கனாதபே | - | தாங்கமுடியாத வெப்பம் |
| கவாடபாடனே | - | கதவை மூடித்திறத்தல் |
| ஸப்தவிபக்த்யர்தே | - | ஏழு வேற்றுமை உருபுகள் |
| தரங்ககே | - | அலை |
| வீதி ப்ரவேசபாவேபி | - | வீதியில் பிரவேசித்தல் |
| ஸமத்வேச | - | சமத்துவம் |
| அங்கராககே | - | அங்கங்களைத் தொடுதல் |
| ஆத்மார்தே | - | தன்னைக் குறித்தல் |
| சபதே சாபி | - | சத்தியம் செய்தல் |
| தூஷ்ணீம் பாவநிதர்சனே | - | தீயதை நிராகரித்தல், அமைதி |
| தாலபத்ரேச | - | பனை ஓலை |
| கேடேச | - | கேடயம் |
| த்ரவ்யாதி ஸ்பர்ஷனேததா | - | பொருட்களைத் தொடுதல் |
| ஆசீர்வாத க்ரியாயாம்ச | - | ஆசீர்வதித்தல் |
| ந்ர்பசிரேஷ்டஸ்ய பாவனே | - | சக்கரவர்த்தி |
| தத்ர தத்ரேதி வசனே | - | இங்கு, அங்கு எனல் |
| ஸிந்தௌச | - | கடலலை |
| ஸுக்ருதிக்ரமே | - | நற்செயல்கள் |
| ஸம்போதனே | - | ஒருவரைக் காட்டல் (விளித்தல்) |
| புரோகேபி | - | முன் செல்லல் |
| கட்கரூபஸ்ய தாரனே | - | வாளை ஏந்துதல் |
| மாஸே | - | மாதம் |
| ஸம்வத்ஸரே | - | வருடம் |
| வர்ஷதினே | - | மழை நாள் |
| ஸம்மார்ஜனேததா | - | கூட்டுதல் |

## 2) த்ரிபதாக விநியோகஹ



**மகுடே வ்ருக்ஷ பாவேபி வஜ்ரே தத்தர வாஸவே /**
**கேதகீ குஸுமே தீபே வன்ஹிஜ்வாலா விஜ்ரும்பனே //**
**கபோதே பத்ரலேகாயாம் பாணார்தே பரிவர்த்தனே /**
**யுஜ்யதே த்ரிபதாகோயம் கதிதோ பரதோத்தமைஹி //**

கருத்து :-

| | | |
|---|---|---|
| மகுடே | - | கிரீடம் |
| வ்ருக்ஷ பாவேபி | - | மரம் |
| வஜ்ரே | - | வஜ்ராயுதம் |
| தத்தர வாஸவே | - | இந்திரன் |
| கேதகீ குஸுமே | - | தாழம்பூ |
| தீபே | - | விளக்கு |
| வன்ஹிஜ்வாலா விஜ்ரும்பனே | - | நெருப்புச் சுவாலை |
| கபோதே | - | புறா |
| பத்ரலேகாயாம் | - | உடலில் வரையப்படும் அலங்காரம் |
| பாணார்தே | - | அம்பு |
| பரிவர்த்தனே | - | சுற்றி வருதல் |

## 3) அர்தபதாக விநியோகஹ



**பல்லவே பலகே தீரே உபயோரிதி வாசகே /**
**க்ரகசே சுரிகாயாம்ச த்வஜே கோபுரஸ்ருங்கயோஹோ //**
**யுஜ்யதே அர்தபதாகோயம் தத்தத் கர்ம ப்ரயோககே /**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| பல்லவே | - | இளந்தளிர் |
| பலகே | - | பலகை |
| தீரே | - | ஆற்றங்கரை |
| உபயோரிதி வாசகே | - | இரண்டு எனல் |
| க்ரகசே | - | வாள் |
| சுரிகாயாம்ச | - | சிறு கத்தி |
| த்வஜே | - | கொடி |
| கோபுர | - | கோபுரம் |
| ஸ்ருங்கயோஹோ | - | கொம்பு |

## 4) கர்தரீமுக விநியோகஹ



**ஸ்திரீபும்ஸயோஸ்து விஸ்லேஷே விபர்யாஸபதேபிவா /**
**லுண்டனே நயனான்தேச மரணே பேதபாவனே //**
**வித்யுதர்தேபி ஏகசைய்யா விரஹே பதனேததா /**
**லதாயாம் யுஜ்யதே யஸ்து ஸகரஹ் கர்தரீமுகஹ //**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| ஸ்த்ரீபும்ஸயோஸ்து | | |
| விஸ்லேஷே | - | ஆண், பெண் வேற்றுமை |
| விபர்யாஸபதேபிவா | - | இது அல்லது அது |
| லுண்டனே | - | உருளல் |
| நயனான்தேச | - | கடைக்கண் |
| மரணே | - | மரணம் |
| பேதபாவனே | - | வேறுபாடு |
| வித்யுதர்தேபி | - | மின்னல் |
| ஏகஷைய்யா விரஹே | - | பிரிவினையின்போது தனியாக உறங்குதல் |
| பதனேததா | - | விழுதல் |
| லதாயாம் | - | கொடி |

## 5) மயூர விநியோகஹ



மயூராஸ்யே லதாயாம்ச சகுனே வமனேததா /
அலகஸ்ய அபநயனே லலாடதிலகேஷுச //
நத்யுதகஸ்ய நிக்ஷேபே சாஸ்த்ரவாதே ப்ரஸித்தகே /
ஏவமர்தேஷு யுஜ்யந்தே மயூரகர பாவனாஹ //

கருத்து :-

| | | |
|---|---|---|
| மயூராஸ்யே | - | மயில் |
| லதாயாம்ச | - | கொடி |
| சகுனே | - | சகுனப்பறவை |
| வமனேததா | - | வாந்தி எடுத்தல் |
| அலகஸ்ய அபநயனே | - | முடியில் சிக்கு எடுத்தல் |
| லலாடதிலகேஷுச | - | பொட்டு வைத்தல் |
| நத்யுதகஸ்ய நிக்ஷேபே | - | ஆற்று நீரைத் தலையில் தெளித்தல் |
| சாஸ்த்ரவாதே | - | சாஸ்திரம் பற்றி விவாதித்தல் |
| ப்ரஸித்தகே | - | பிரசித்தம் |

## 6) அர்தசந்த்ர விநியோகஹ



சந்த்ரே க்ருஷ்ணாஷ்ட்டமீபாஜி கலஹஸ்தார்தகேபிச /
பல்லாயுதே தேவதானாம் அபிஷேசனகர்மணி //
புக்பாத்ரேச உத்பவே கட்யாம் சிந்தாயாம் ஆத்மவாசகே /
த்யானேச ப்ரார்தனேசாபி அங்கானாம் ஸ்பர்ஷனேததா //
ப்ராக்ருதானாம் நமஸ்காரே அர்தசந்த்ரோ நியுஜ்யதே /

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| சந்த்ரே | - | சந்திரன் |
| க்ருஷ்ணாஷ்ட்டமீபாஜி | - | 8வது தேய்பிறைச்சந்திரன் |
| கலஹஸ்தார்தகேபிச | - | கழுத்தைப் பிடித்துத் தள்ளுதல் |
| பல்லாயுதே | - | பல்லாயுதம் (ஈட்டி) |
| தேவதானாம் அபிஷேசன கர்மணி | - | இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் |
| புக்பாத்ரேச | - | சாப்பிடும் தட்டு |
| உத்பவே | - | தோற்றம் |
| கட்யாம் | - | இடை |
| சிந்தாயாம் | - | சிந்தனை செய்தல் |
| ஆத்மவாசகே | - | தன்னைக்குறித்தல் |
| த்யானேச | - | தியானித்தல் |
| ப்ரார்தனேசாபி | - | பிரார்த்தனை செய்தல் |
| அங்கானாம் ஸ்பர்ஷனேததா | - | அங்கங்களைத் தொடுதல் |
| ப்ராக்ருதானாம் நமஸ்காரே | - | பெரியோரை வணங்குதல் |

## 7) அராள விநியோகஹ



**விஷாதி அம்ருத பானேஷ" ப்ரசண்ட பவனேபிச /**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| விஷாதி அம்ருத பானேஷ" | - | விஷம் அமிர்தம் அருந்துதல் |
| ப்ரசண்ட பவனேபிச | - | புயல்காற்று |

## 8) சுகதுண்ட விநியோகஹ



பாணப்ரயோகே குன்தார்தேவ ஆலயஸ்ய ஸ்மிருதிக்ரமே /
மர்மோக்த்யாம் உக்ரபாவேஷ" சுகதுண்டோ நியுஜ்யதே //

கருத்து :-

பாணப்ரயோகே - அம்பு எய்தல்
குன்தார்தேவ - ஈட்டி
ஆலயஸ்ய ஸ்மிருதிக்ரமே - பழையனவற்றை நினைவு கூறுதல்
மர்மோக்த்யாம் - முணுமுணுத்தல்
உக்ரபாவேஷ" - கடும் கோபம்

## 9) முஷ்டி விநியோகஹ



ஸ்திரே கசக்ரஹே தார்டியே வஸ்த்வாதீனாம்ச தாரணே /
மல்லானாம் யுத்தபாவேபி முஷ்டி ஹஸ்தோயம் இஷ்யதே //

கருத்து :-

ஸ்திரே - உறுதி
கசக்ரஹே - முடியைப் பிடித்தல்
தார்டியே - தைரியம்
வஸ்த்வாதீனாம்ச தாரணே - பொருட்களை பிடித்தல்
மல்லானாம் யுத்தபாவேபி - மல்லர்களின் யுத்தம்

## 10) சிகர விநியோகஹ



மதனே கார்முகே ஸ்தம்பே நிஸ்சயே பித்ருகர்மணி /
ஓஷ்டே ப்ரவிஷ்ட ரூபேச ரதனே ப்ரஷ்னபாவனே //
லிங்கே நாஸ்தீதி வசனே ஸ்மரனே அபினயாந்திகே /
கடிபந்தாகர்ஷணேச பரிரம்ப விதிக்ரமே //
கண்டானிநாதே சிகரோ யுஜ்யதே பரதாதிபிஹி /

கருத்து :-

| | | |
|---|---|---|
| மதனே | - | மன்மதன் |
| கார்முகே | - | வில் |
| ஸ்தம்பே | - | தூண் |
| நிஸ்சயே | - | நிச்சயம் |
| பித்ருகர்மணி | - | பிதிர்கடன் தீர்த்தல் |
| ஓஷ்டே | - | மேல் உதடு |
| ப்ரவிஷ்ட ரூபேச | - | பாத்திரத்தினுள் ஊற்றுதல் |
| ரதனே | - | பற்கள் |
| ப்ரஷ்னபாவனே | - | கேள்வி கேட்டல் |
| லிங்கே | - | சிவலிங்கம் |
| நாஸ்தீதி வசனே | - | இல்லை எனல் |
| ஸ்மரனே | - | நினைவு கூறுதல் |
| அபினயாந்திகே | - | அபிநயம் செய்தல் |
| கடிபந்தாகர்ஷணேச | - | இடுப்பைச் சுற்றிக் கட்டுதல் |
| பரிரம்ப விதிக்ரமே | - | அணைத்தல் |
| கண்டானிநாதே | - | மணி அடித்தல் |

## 11) கபித்த விநியோகஹ



லக்ஷ்மியாம் சைவ ஸரஸ்வத்யாம் நடானாம் தாளதாரனே /
கோதோஹனேபி அஞ்ஜனேச லீலாகுஸுமதாரனே //
சேலாஞ்சலாதி க்ரஹனே படஸ்யைவ அவகுண்டனே /
தூபதீபார்சனே சாபி கபித்தஹ் ஸம்ப்ரயுஜ்யதே //

கருத்து :-

| | |
|---|---|
| லக்ஷ்மியாம் | - லக்ஷ்மி |
| ஸரஸ்வத்யாம் | - சரஸ்வதி |
| நடானாம் தாளதாரனே | - தாளம் போடுதல் |
| கோதோஹனேபி | - பால் கறத்தல் |
| அஞ்ஜனேச | - கண்ணுக்கு மை தீட்டுதல் |
| லீலாகுஸுமதாரனே | - பூவை பிடித்திருத்தல் |
| சேலாஞ்சலாதி க்ரஹனே | - சேலைத்தலைப்பை பிடித்தல் |
| படஸ்யைவ அவகுண்டனே | - சேலைத்தலைப்பால் முகத்தை மூடுதல் |
| தூபதீபார்சனே | - தூபதீபம் காட்டுதல் |

## 12) கடகாமுக விநியோகஹ



(1) (2) (3)

குஸுமாவசயே முக்தாஸிரக்தாம்னாம் தாரனேததா /
ஷரமத்யாகர்ஷணேச நாகவல்லீ ப்ரதானகே //
கஸ்தூரிகாதி வஸ்தூனாம் பேஷனே கந்த வாஸனே /
வசனே திருஷ்டி பாவேபி கடகாமுக இஷ்யதே //

கருத்து :-

| | | |
|---|---|---|
| குஸுமாவசயே | - | பூப்பறித்தல் |
| முக்தாஸிரக்தாம்னாம் | - | முத்துமாலை |
| தாரனேததா | - | அணிதல் |
| ஷரமத்யாகர்ஷணேச | - | வில்லின் மத்தியை இழுத்தல் |
| நாகவல்லி பிரதானகே | - | வெற்றிலை மடித்துக் கொடுத்தல் |
| கஸ்தூரிகாதி வஸ்தூனாம் | - | கஸ்தூரி சந்தனம் முதலிய பொருட்களில் இருந்து பசை தயாரித்தல் |
| பேஷனே | - | கலத்தல் |
| கந்த வாஸனே | - | மணத்தல் |
| வசனே | - | கூறுதல் |
| திருஷ்டி பாவேபி | - | பார்வை |

## 13) ஸுசீ விநியோகஹ



ஏகார்தேபி பரப்ரம்ம பாவனாயாம் ஸதேபிச /
ரவெள நகர்யாம் லோகார்தே ததேதிவசனேபிச //
யச்சப்தேபிச தச்சப்தே விஜநார்தேபி தர்ஜனே /
கார்ஷ்யே சலாகே வபுஷி ஆச்சர்யே வேணி பாவனே //
சத்ரே ஸமர்தே பாணௌச ரோமால்யாம் பேரீவாதனே /
குலால சக்ர ப்ரமனே ரதாங்க மண்டலேததா //
விவேசனே தினான்தேச ஸுசீ ஹஸ்தஹ் ப்ரகீர்த்திதஹ/

கருத்து :-

| | | |
|---|---|---|
| ஏகார்தேபி | - | ஒன்று |
| பரப்ரம்ம பாவனாயாம் | - | பரபிரம்மா |
| ஸதேபிச | - | நூறு |
| ரவௌ | - | சூரியன் |
| நகர்யாம் | - | நகரம் |
| லோகார்தே | - | உலகம் |
| ததேதிவசனேபிச | - | அப்படித்தான் எனக்கூறல் |
| யச்சப்தேபிச தச்சப்தே | - | இது அல்லது அது எனல் |
| விஜனார்தேபி | - | தனிமை |
| தர்ஜனே | - | பயமுறுத்தல் |
| கார்ஷ்யே | - | மெலிதல் |
| சலாகே | - | முள் |
| வபுஷி | - | உடம்பு |
| ஆச்சர்யே | - | ஆச்சரியம் |
| வேணி பாவனே | - | முடியை பின்னுதல் |
| சத்ரே | - | குடை |
| ஸமர்தே | - | சாமர்த்தியம் |
| பாணௌச | - | உள்ளங்கை |
| ரோமால்யாம் | - | புருவம் |
| பேரீவாதனே | - | பேரிகை (மத்தளம்) அடித்தல் |
| குலால சக்ர ப்ரமனே | - | குயவனின் சக்கரம் |
| ரதாங்க மண்டலேததா | - | சக்கரத்தின் சுற்றளவு |
| விவேசனே | - | யோசித்தல் |
| தினான்தேச | - | நாளின் முடிவு |

## 14) சந்த்ரகலா விநியோகஹ



சந்த்ரே முகேச ப்ராதேஷே தன்மாத்ராகார வஸ்துனி /
சிவஸ்ய மகுடே கங்காநத்யாம்ச லகுடேபிச //
ஏஷாம் சந்த்ரகலா சைவ விநியோஜ்யா விதீயதே /

**கருத்து :-**

சந்த்ரே - சந்திரன்
முகேச - முகம்
ப்ராதேஷே - ஒரு சாண்
தன்மாத்ராகார வஸ்துனி - குறிப்பிட்ட அளவையில் உள்ள பொருட்கள்
சிவஸ்ய மகுடே - சிவனின் மகுடம்
கங்காநத்யாம்ச - கங்கா நதி
லகுடேபிச - கோடரி

## 15) பத்மகோச விநியோகஹ



**பலே பில்வகபித்தாதௌ ஸ்திரீணாம்ச குசகும்பயோஹோ /**
**ஆவர்தே கந்துகே ஸ்தால்யாம் போஜனே புஷ்பகோரகே //**
**ஸஹகார பலே புஷ்பவர்ஷே மஞ்ஜரிகாதிஷு /**
**ஜபாகுஸுமபாவேச கண்டாரூபே விதானகே //**
**வல்மீகே கமலே ப்யண்டே பத்மகோஷோ விதீயதே /**

**கருத்து :-**

பலே பில்வகபித்தாதௌ - வில்வம், விளா, முதலிய பழங்கள்
ஸ்திரீணாம்ச குசகும்பயோஹோ - பெண்ணின் மார்பு
ஆவர்தே - சுற்றி வருதல்
கந்துகே - பந்து
ஸ்தால்யாம் - பாத்திரம்
போஜனே - சாப்பிடுதல்

| | | |
|---|---|---|
| புஷ்பகோரகே | - | பூமாலை |
| ஸஹகார பலே | - | மாம்பழம் |
| புஷ்பவர்ஷே | - | பூமழை |
| மஞ்ஜரிகாதிஷு | - | பூங்கொத்து |
| ஜபாகுஸுமபாவேச | - | பூஜைக்கு பாவிக்கும் மலர் |
| விதானகே | - | விதானம் |
| கண்டாரூபே | - | மணி |
| வல்மீகே | - | புற்று |
| கமலே | - | தாமரை |
| ப்யண்டே | - | முட்டை |

## 16) ஸர்பசீர்ஷ விநியோகஹ



**சந்தனே புஜகே மந்த்ரே ப்ரோக்ஷனே போஷணாதிஷு /**
**தேவஸ்ய உதகதானேஷு ஆஸ்பாலே கஜ கும்பயோஹோ //**
**புஜஸ்தானேது மல்லானாம் யுஜ்யதே ஸர்பசீர்ஷகஹ /**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| சந்தனே | - | சந்தனம் |
| புஜகே | - | பாம்பு |
| மந்த்ரே | - | கீழ் ஸ்தாயி |
| ப்ரோக்ஷனே | - | நீர் தெளித்தல் |
| போஷணாதிஷு | - | பராமரித்தல் |
| தேவஸ்ய உதகதானேஷு | - | தேவர்களுக்கு நீரை அர்ப்பணித்தல் |
| ஆஸ்பாலே | - | தட்டிக்கொடுத்தல் |
| கஜ கும்பயோஹோ | - | யானையின் தலை |
| புஜஸ்தானேது மல்லானாம் | - | மல்யுத்த வீரரின் புஜங்கள் |

## 17) ம்ருகசீர்ஷ விநியோகஹ



**ஸ்திரீணாமர்தே கபோலேச சக்ர மர்யாதயோரபி /**
**பீத்யாம் விவாதே நேபத்யே ஆஹ்வானேச த்ரிபுண்ட்ரகே //**
**ம்ருகமுகே ரங்கமல்யாம் பாதஸம்வாஹனேததா /**
**ஸஞ்சாரேச ப்ரியாஹ்வானே யுஜ்யதே ம்ருகசீர்ஷகஹ //**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| ஸ்திரீணாமர்தே | - | பெண்கள் |
| கபோலேச | - | கன்னம் |
| சக்ர | - | சக்கரம் |
| மர்யாதயோரபி | - | எல்லை |
| பீத்யாம் | - | பயம் |
| விவாதே | - | விவாதம் |
| நேபத்யே | - | அணிதல் (ஆடை, ஆபரணம்) |
| ஆஹ்வானேச | - | அழைத்தல் |
| த்ரிபுண்ட்ரகே | - | நெற்றியில் குறியிடுதல் |
| ம்ருகமுகே | - | மானின் முகம் |
| ரங்கமல்யாம் | - | கோலமிடுதல் |
| பாதஸம்வாஹனேததா | - | பாதங்களை அமுக்குதல் |
| ஸஞ்சாரேச | - | நடத்தல் |
| ப்ரியாஹ்வானே | - | பிரியமானவனை அழைத்தல் |

## 18) ஸிம்ஹமுக விநியோகஹ



**ஹோமே ஷஷே கஜே தர்ப சலனே பத்ம தாமணி /**
**ஸிம்ஹானனே வைத்யபாகே ஷோதனே ஸம்ப்ரயுஜ்யதே //**

கருத்து :-

| | |
|---|---|
| ஹோமே | - ஓமம் வளர்த்தல் |
| ஷஷே | - முயல் |
| கஜே | - யானை |
| தர்ப சலனே | - தர்ப்பைப்புல் |
| பத்ம தாமணி | - தாமரைப் பூமாலை |
| ஸிம்ஹானனே | - சிங்கத்தின் முகம் |
| வைத்யபாகே | - மருந்துகளை கலத்தல் |
| ஷோதனே | - பரிசோதித்தல் |

## 19) காங்குல விநியோகஹ



**லகுசஸ்ய பலே பால கிங்கிண்யாம் கண்டிகார்தகே /**
**சகோரே க்ரமுகே பாலகுசே கல்ஹாரகேததா //**
**சாதகே நாலிகேரேச காங்குலோ யுஜ்யதே கரஹ /**

கருத்து :-

| | |
|---|---|
| லகுசஸ்ய பலே | - ஒரு வகைப் பழம் |
| பால கிங்கிண்யாம் | - சிறுவர் வைத்திருக்கும் மணி |
| கண்டிகார்தகே | - பெரிய மணி |
| சகோரே | - செண்பகம் |
| க்ரமுகே | - பாக்குமரம் |
| பாலகுசே | - இளம் பெண்ணின் மார்பு |
| கல்ஹாரகேததா | - நீர் அல்லி |
| சாதகே | - சாதகப்பறவை |
| நாலிகேரேச | - தேங்காய் |

## 20) அலபத்ம விநியோகஹ



விகசாப்ஜே கபித்தாதி பலே ஆவர்தகே குசே /
விரஹே முகுரே பூர்ணசந்த்ரே ஸௌந்தர்ய பாவனே //
தம்மில்லே சந்த்ர ஷாலாயாம் க்ராமேச உத்த்ருத கோபயோஹோ /
தடாகே ஷகடே சக்ரவாகே கலகலாரவே //
ஷ்லாகனே ஸோ அலபத்மஷ்ச கீர்திதோ பரதாகமே /

கருத்து :-

| | | |
|---|---|---|
| விகசாப்ஜே | - | மலர்ந்த தாமரை |
| கபித்தாதி பலே | - | விளாம்பழம் |
| ஆவர்தகே | - | சுற்றி வருதல் |
| குசே | - | மார்பு |
| விரஹே | - | விரகம் (பிரியமானவனை பிரிந்திருப்பதால் தோன்றும் மனநிலை) |
| முகுரே | - | கண்ணாடி |
| பூர்ணசந்த்ரே | - | பூரணசந்திரன் |
| ஸௌந்தர்ய பாவனே | - | அழகு |
| தம்மில்லே | - | கொண்டை |
| சந்த்ர ஷாலாயாம் | - | கோபுரம் |
| க்ராமேச | - | கிராமம் |
| உத்த்ருத கோபயோஹோ | - | கோபம் |
| தடாகே | - | தடாகம் |
| ஷகடே | - | வண்டி |
| சக்ரவாகே | - | சக்கரவாகப் பறவை |
| கலகலாரவே | - | முணுமுணுத்தல் |
| ஷ்லாகனே | - | புகழ்தல் |

## 21) சதுர விநியோகஹ



**கஸ்தூர்யாம் கிஞ்சிதர்தேச ஸ்வர்ணே தாம்ரேச லோஹகே /**
**ஆர்த்ரே கேதே ரஸாஸ்வாதே லோசனே வர்ண பேதனே //**
**ப்ரமானே ஸரஸே மந்த கமனே ஷகலீ க்ருதே /**
**ஆனனே க்ருத தைலாதௌ யுஜ்யதே சதுரஹ் கரஹ //**

கருத்து :-

| | |
|---|---|
| கஸ்தூர்யாம் | - கஸ்தூரி |
| கிஞ்சிதர்தேச | - சிறிதளவு |
| ஸ்வர்ணே | - தங்கம் |
| தாம்ரேச | - செம்பு |
| லோஹகே | - இரும்பு |
| ஆர்த்ரே | - மனக்கசிவு |
| கேதே | - துக்கம் |
| ரஸாஸ்வாதே | - ருசி பார்த்தல் |
| லோசனே | - கண்கள் |
| வர்ண பேதனே | - ஜாதி வேறுபாடு |
| ப்ரமானே | - சத்தியம் |
| ஸரஸே | - சரசம் |
| மந்த கமனே | - மெல்ல நடத்தல் |
| ஷகலீ க்ருதே | - இருதுண்டுகளாக முறித்தல் |
| ஆனனே | - முகம் |
| க்ருத தைலாதௌ | - நெய், எண்ணெய் முதலியன |

## 22) ப்ரமர விநியோகஹ



ப்ரமரேச ஷுகே பக்ஷே ஸாரஸே கோகிலாதிஷு /
ப்ரமராக்யஸ்ச ஹஸ்தோயம் கீர்திதோ பரதாகமே //

கருத்து :-

| | | |
|---|---|---|
| ப்ரமரேச | - | வண்டு |
| ஷுகே | - | கிளி |
| பக்ஷே | - | சிறகு |
| ஸாரஸே | - | கொக்கு |
| கோகிலாதிஷு | - | குயில் |

## 23) ஹம்ஸாஸ்ய விநியோகஹ



மாங்கல்யே ஸுத்ர பந்தேச உபதேஷ விநிஷ்சயே /
ரோமாஞ்சே மௌக்திகாதௌச தீப வர்தி ப்ரஸாரனே //
நிகஷே மல்லிகாதௌச சித்ரே தல்லேகனேததா /
தம்ஷேச ஜலபந்தேச ஹம்ஸாஸ்யோ யுஜ்யதே கரஹ //

கருத்து :-

| | | |
|---|---|---|
| மாங்கல்யே ஸுத்ர பந்தேச | - | மாங்கல்ய கயிற்றை கட்டுதல் |
| உபதேஷ | - | உபதேசம் செய்தல் |
| நிஷ்சயே | - | நிச்சயம் |
| ரோமாஞ்சே | - | மயிர்கூச்செரிதல் |

| | | |
|---|---|---|
| மௌக்திகாதௌச | - | முத்துமாலை |
| தீப வர்தி ப்ரஸாரனே | - | விளக்கின் திரியை உயர்த்தல் |
| நிகஷே | - | உரைகல் |
| மல்லிகாதௌச | - | மல்லிகை மாலை |
| சித்ரே தல்லேகனேததா | - | சித்திரம் வரைதல் |
| தம்ஷேச | - | கடித்தல் |
| ஜலபந்தேச | - | அணைக்கட்டு |

## 24) ஹம்ஸபக்ஷ விநியோகஹ



**ஷட் ஸங்கியாயாம் ஸேதுபந்தே நகரேகாங்கனேததா /**

**பிதானே ஹம்ஸபக்ஷோயம் கதிதோ பரதாகமே //**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| ஷட் ஸங்கியாயாம் | - | ஆறு எனும் எண்ணிக்கை |
| ஸேதுபந்தே | - | அணை கட்டல் |
| நகரேகாங்கனேததா | - | நகத்தால் வரைதல் |
| பிதானே | - | மூடுதல் |

## 25) ஸந்தம்ச விநியோகஹ



**உதரே பலிதானேச வ்றனே கீடே மஹாபயே /**
**அர்சனே பஞ்ச சங்கியாயாம் ஸந்தம்ஷாக்யோ நியுஜ்யதே //**

கருத்து :-

உதரே - வயிறு
பலிதானேச - தானம் செய்தல்
வ்றனே - காயம்
கீடே - புழு
மஹாபயே - பெரும்பயம்
அர்சனே - அர்ச்சனை செய்தல்
பஞ்ச சங்கியாயாம் - ஐந்து என்னும் எண்ணிக்கை

## 26) முகுள விநியோகஹ



குமுதே போஜனே பஞ்சபாணே முத்ராதிதாரனே /
நாபௌச கதலீ புஷ்பே யுஜ்யதே முகுளஹ் கரஹ //

கருத்து :-

குமுதே - நீர் அல்லி / தாமரை
போஜனே - சாப்பிடுதல் / உண்ணுதல்
பஞ்சபாணே - மன்மதனின் ஐந்து மலர் அம்புகள் / பஞ்சபாணம்
முத்ராதிதாரனே - முத்திரை குத்துதல் / முத்திரையிடுதல்
நாபௌச - தொப்புள் / தொப்புள் கொடி
கதலீ புஷ்பே - வாழைப்பூ

## 27) தாம்ரசூட விநியோகஹ


(1)


(2)

குக்குடாதௌ பகே காகே உஷ்ரே வத்ஸேச லேகனே /
யுஜ்யதே தாம்ரசூடாக்யஹ கரோ பரதவேதிபிஹி //

கருத்து :-

| | | |
|---|---|---|
| குக்குடாதௌ | - | சேவல் |
| பகே | - | கொக்கு |
| காகே | - | காகம் |
| உஷ்ரே | - | ஒட்டகம் |
| வத்ஸேச | - | பசுக்கன்று |
| லேகனே | - | எழுதுதல் |

## 28) த்ரிசூல விநியோகஹ



பில்வபத்ரே த்ரித்வயுக்தே த்ரிசூல கர ஈரிதஹ /

கருத்து :-

| | | |
|---|---|---|
| பில்வபத்ரே | - | வில்வம் இலை |
| த்ரித்வயுக்தே | - | மும்மூர்த்தி |

# ஸம்யுத ஹஸ்த விநியோகங்கள்

## 1) அஞ்ஜலி விநியோகஹ



**தேவதா குரு விப்ரானாம் நமஸ்காரேஷு அனுக்ரமாத் / கார்யஹ ஷிரோமுகோரஸ்தோ விநியோகே அஞ்ஜலிர் புதைஹி //**

**கருத்து :-**

| | | |
|---|---|---|
| தேவதா | - கடவுளை | (தலைக்கு மேல்) |
| குரு | - குருவினை | (புருவ மத்தியில்) |
| ப்ராணாம் | - சபையோரை | (மார்புக்கு முன்) |
| நமஸ்காரேஷு | - வணங்குதல் | |

## 2) கபோத விநியோகஹ



**ப்ரணாமே குருஸம்பாஷே வினய அங்கீ க்ருதேஷ்வயம் /**

**கருத்து :-**

| | |
|---|---|
| ப்ரணாமே | - வணங்குதல் |
| குருஸம்பாஷே | - குருவுடன் உரையாடுதல் |
| வினய அங்கீ | - மரியாதையோடு அங்கீகரித்தல் |

## 3) கர்கட விநியோகஹ



சமூஹாகமனே துன்ததர்ஷனே ஷங்கபூரணே /
அங்கானாம் மோடனே சாக்கோன்நமனேச ப்ரயுஜ்யதே //

கருத்து :-

சமூஹாகமனே - கூட்டம்
துன்ததர்ஷனே - வயிறு
ஷங்கபூரணே - சங்கு ஊதுதல்
அங்கானாம் மோடனே - அங்கங்களை அமுக்குதல்
சாக்கோன் நமனேச - கிளைகளை வளைத்தல்

## 4) ஸ்வஸ்திக விநியோகஹ



ஸம்யோகேன ஸ்வஸ்திகாக்யஹ மகரே விநியுஜ்யதே /

கருத்து :-

மகரே - முதலை

## 5) டோலாஹஸ்த விநியோகஹ



நாட்யாரம்பே ப்ரயோக்தவ்ய இதி நாட்வியதோ விதுகு /

கருத்து :-

நாட்யாரம்பே - நாட்டியாரம்பம்

## 6) புஷ்பபுட விநியோகஹ



**நீராஜனாவிதௌ வாரிபலாதி க்ரஹணேபிச /**
**சந்த்யாயாம் அர்க்ய தானேபி மந்த்ரபுஷ்பேச யுஜ்யதே //**

**கருத்து :-**

நீராஜனாவிதௌ - கற்பூர தீபம் காட்டுதல்
வாரிபலாதி க்ரஹணேபிச - நீர், பழம் முதலியவற்றை எடுத்தல்
சந்த்யாயாம் அர்க்ய தானேபி - அந்தியில் நீராபிஷேகம் செய்தல்
மந்த்ர புஷ்பேச - மந்திர சக்தியுள்ள பூ

## 7) உத்ஸங்க விநியோகஹ



**ஆலிங்கனேச லஜ்ஜாயாம் அங்கதாதி ப்ரதர்ஷனே /**
**பாலானாம் சிக்ஷனே சாயம் உத்ஸங்கோ யுஜ்யதே கரஹ //**

**கருத்து :-**

ஆலிங்கனேச - அணைத்தல்
லஜ்ஜாயாம் - வெட்கம்
அங்கதாதி ப்ரதர்ஷனே - உடலைக் காட்டுதல்
பாலானாம் சிக்ஷனே சாயம் - சிறுவர்களுக்கு கற்பித்தல்

## 8) சிவலிங்க விநியோகஹ



விநியோகஸ்து தஸ்யைவ சிவலிங்கஸ்ய தர்ஷனே /

கருத்து :-

சிவலிங்கஸ்ய - சிவலிங்கம்

## 9) கடகாவர்தன விநியோகஹ



பட்டாபிஷேகே பூஜாயாம் விவாஹாதிஷு யுஜ்யதே /

கருத்து :-

பட்டாபிஷேகே - முடிசூட்டுதல்
பூஜாயாம் - பூஜை
விவாஹாதிஷு - விவாகம்

## 10) கர்தரீஸ்வஸ்திக விநியோகஹ



சாக்காஸுச அத்ரிசிகரே வ்ருக்ஷேஷுச நியுஜ்யதே /

கருத்து :-

சாக்காஸுச - கிளைகள்
அத்ரிசிகரே - மலையுச்சி
வ்ருக்ஷேஷுச - மரம்

## 11) சகட விநியோகஹ



ராக்ஷஸாபினயே ப்ராயஹ சகடோ விநியுஜ்யதே /

கருத்து :-

ராக்ஷஸாபினயே - அரக்கர்

## 12) சங்க விநியோகஹ



சங்காதிஷு ப்ரயோஜ்யோயம் இத்யாஹுர் பரதாதயஹ /

கருத்து :-

சங்காதிஷு - சங்கு

## 13) சக்ர விநியோகஹ



சக்ரஹஸ்தஸ்ஸ விஜ்ஞேயஹ சக்ரார்தே விநியுஜ்யதே /

கருத்து :-

சக்ர - சக்கராயுதம்

## 14) ஸம்புட விநியோகஹ



வஸ்த்வாச்சாதே ஸம்புடேச ஸம்புடஹ் கர ஈரிதஹ் /

கருத்து :-

வஸ்த்வாச்சாதே - மூடுதல்
ஸம்புடேச - சிறிய பெட்டி

## 15) பாஷ விநியோகஹ



அன்யோன்ய கலஹே பாஷே ச்ருங்கலாயாம் நியுஜ்யதே /

கருத்து :-

அன்யோன்ய கலஹே - பரஸ்பர சண்டை
பாஷே - கயிறு
ச்ருங்கலாயாம் - சங்கிலி

## 16) கீலகௌ விநியோகஹ



ஸ்னேஹே நர்மானுலாபேச கீலகோ விநியுஜ்யதே /

கருத்து :-

ஸ்னேஹே நர்மானுலாபேச - நட்பு

## 17) மத்ஸ்ய விநியோகஹ



ஏதஸ்ய விநியோகஸ்து சம்மதோ மத்ஸ்ய தர்ஷனே /

கருத்து :-

மத்ஸ்ய - மீன்

## 18) கூர்ம விநியோகஹ



கூர்ம ஹஸ்தஸ்ஸ விஜ்னேய கூர்மார்தே விநியுஜ்யதே /

கருத்து :-

கூர்ம - ஆமை

## 19) வராக விநியோகஹ



ஏதஸ்ய விநியோக ஸ்யாத் வராஹர்த ப்ரதர்ஷனே /

கருத்து :-

வராஹர்த - பன்றி

## 20) கருட விநியோகஹ



கருடஹஸ்த இத்யாஹுர் கருடார்தே நியுஜ்யதே /

கருத்து :-

கருட - கருடப்பறவை

## 21) நாகபந்த விநியோகஹ



ஏதஸ்ய விநியோகஸ்து நாகபந்தேஹி சம்மதஹ /

கருத்து :-

நாகபந்தேஹி - நாகபந்தம் (பாம்பின் கட்டு)

## 22) கட்வா விநியோகஹ



கட்வா ஹஸ்தஹ் பவேத் ஏஷ கட்வா சிபிகயோஸ் ஸ்ம்ருதஹ /

கருத்து :-

கட்வா - கட்டில்

சிபிகயோஸ் - பல்லக்கு

## 23) பேருண்ட விநியோகஹ



பேருண்டே பக்ஷிதாம்பத்யோர் பேருண்டோ யுஜ்யதே கரஹ /

கருத்து :-

பேருண்டே பக்ஷிதாம்பத்யோர்- சோடி பேருண்டப் பறவை

## 24) அவஹித்த விநியோகஹ



ஷ்ருங்கார நடனேசைவ லீலா கந்துக தாரனே /
குஜார்தே யுஜ்யதே சோயம் அவஹித்த கார விதஹ //

கருத்து :-

ஷ்ருங்கார நடனேசைவ - சிருங்கார நடனம்
லீலா கந்துக தாரனே - பந்தடித்தல்
குஜார்தே - மார்பு

# அபூர்வ முத்திரைகளும் அவற்றின் விநியோகங்களும்

**1) வ்யாக்ரம் (புலி)**



பத்மகோஷ கையில் விரல்களை வளைத்தல்.

**விநியோகம் :-** புலி, தவளை, முத்துச்சிப்பி, குரங்கு

**2) ஊர்ணநாபம் (எட்டுக்கால் பூச்சி)**



வ்யாக்ர ஹஸ்தத்தை இறுக்கி உள்ளங்கையோடு அழுத்திப் பிடித்தல்.

**விநியோகம் :-** தலையைச் சொரிதல், திருட்டு, நரசிம்ம அவதாரம், மான் முகம், ஆமை

குறிப்பு :-

ஊர்ணநாப ஹஸ்தத்தையும், வ்யாக்ர ஹஸ்தத்தையும் ஒன்றெனக் கொள்ளலாம். எனவே மேற்கூறிய விநியோகங்கள் அனைத்தும் இரு ஹஸ்தங்களுக்கும் பொருந்தும்.

### 3) அர்தஸூசீ (அரை ஊசி)



கபித்த முத்திரையில் ஆள்காட்டி விரலை மேலே நீட்டுதல்.

**விநியோகம் :-** பெரிய புழு, முளை, பறவையின் குஞ்சு, துளிர்

### 4) பாணம் (அம்பு)

நடு மூன்று விரல்களையும் பெருவிரலுடன் சேர்த்து வைத்து சுண்டுவிரலை மட்டும் தனியே நீட்டுதல்.

**விநியோகம் :-** ஆறு என்ற எண், பாணம், களப்பை, உழுதல்

### 5) அர்தகாங்குலம் (சிலிட்டகாங்குலம்/காங்குலபேதம்)

காங்குல முத்திரையில் சுண்டுவிரலை வளைத்தல்.

### 6) த்ரிலிங்கம் (மூன்று லிங்கம்)

சுண்டுவிரலையும், பெருவிரலையும் சேர்த்து மற்றைய விரல்களை மடக்குதல்.

**விநியோகம் :-** ஊசிகுத்துதல், திருவிளக்கு, முக்கோணம்.

### 7) ப்ராளம்பம்

சந்திரகலா முத்திரையில் மடக்கப்பட்டுள்ள மூன்று விரல்களையும் சுட்டுவிரலுக்குச் செங்குத்தாக நீட்டுதல்.

**விநியோகம் :-** உடலைக்காட்டல், வினாவுதல் (யார், யாருடைய, என்ன)

# நாட்டியத்தின் உட்பிரிவுகள்

நாட்டியத்தின் உட்பிரிவுகள் மூன்று வகைப்படும்.

அவையாவன:- 1) நாட்டியம்
2) நிருத்தம்
3) நிருத்தியம்

இவை நடனபேதங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.

## நாட்டியம்

நாடகத்துக்குச் சிறந்த ரஸ அபிநயம், பாவ அபிநயம் இவைகளைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதே நாட்டியம் ஆகும். இது ஒரு நடன நாடகம். ஆட்டத்தில் ஒரே ஒரு நடிகை பல்வேறு பாத்திரங்களின் குணாதிசயங்களை அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்துவது நிருத்தியம். ஆனால் இங்கே நாட்டிய நாடகத்தில் எத்தனை பாத்திரங்கள் உள்ளனவோ அத்தனை பாத்திரத்திற்கும் ஒவ்வொரு நடிகரும் அபிநயம் பிடித்து ஆடுவார்கள். இதில் நிருத்தமும் நிருத்தியமும் அடங்கி விடும். இதில் இயல், இசை, நாடகம் மூன்றும் இணைந்திருக்கும்.

உ+ம்:- இராமாயணம், குறவஞ்சி

## நிருத்தம்

அபிநயங்கள் இன்றி பிரத்தியாங்க உபாங்கங்களால் சொல்லப்பட்ட முறையில் சரீரத்தை மட்டும் வேண்டிய வரையில் அசைப்பதும் வளைப்பதும் நிருத்தமாகும். இந் நிருத்தம் ரஸ, பாவங்களை நீக்கிய ஒருவகை நடனம்.

இங்கு தாளத்திற்கும், லயத்திற்கும் தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்தாத ஆடல் நிருத்தமாகும். காண்பவர் மனதை காந்தமென ஈர்ப்பதோடு ஆடுபவர்களையும் ஆனந்தத்தில் ஆழ்த்தும் ஆற்றல் இதற்குண்டு. நிருத்தத்திற்கு அங்க சுத்தமும் ஸெளஷ்டவமும் மிக முக்கியம். முறைப்படி பயின்று மனதையும் செலுத்தி ஆடப்படும் நிருத்தம் மன நிறைவை அளிக்கவல்ல தலையாய நுண்கலையாகும்.

உ+ம்:- அலாரிப்பு, ஜதிஸ்வரம்

## நிருத்தியம்

கீதம், அபிநயம், பாவம் இவைகளைக் கொண்டு தாளக்கட்டு விடாமல் ஆடவேண்டியவை நிருத்தியமாகும். பாடலின் பொருளை கை முத்திரைகளினாலும், தாளத்தினை பாதங்களைத் தட்டி ஆடுவதாலும், பாவத்தினை முகத்தினாலும் கண்களினாலும் வெளிக்கொண்டு வரல் நிருத்தியமாகும். சுருக்கமாகக் கூறினால், ரஸ பாவங்களைக் கூட்டி, தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்துதலே நிருத்தியம் எனப்படும்.

உ+ம்:- சப்தம், வர்ணம்



# வரைவிலக்கணங்கள்

## அடவு

அடவு என்பது ஆடப்படும் கலைகளுக்கு ஜீவநாடி போன்றதொரு ஆதார உறுப்பாகும். இது ஆடல் என்ற வேர்ச்சொல்லைக் கொண்டது. அடவுகளுக்கு உருவகம் கொடுப்பது ஸ்தானம், சாரி, நிருத்த ஹஸ்தம் ஆகிய மூன்று உறுப்புகளாகும். உடலின் நிலைகளை ஸ்தானம் என்றும், காலின் அசைவை சாரி என்றும், கைகளின் அசைவை நிருத்த ஹஸ்தம் என்றும் கூறுவர். அடவு என்ற சொல்லே சமஸ்கிருதத்தில் கரணம் என அழைக்கப்படுகிறது.

அதாவது ஸ்தானம், சாரி, நிருத்த ஹஸ்தம், கண் அசைவு, தலை அசைவு, கழுத்தசைவுகள் யாவும் ஒருங்கே ஒரே நேரத்தில் இணைந்து தாளச்சீர்ப் பிரமாணத்துக்கேற்ப வருவது அடவு எனப்படும். அடவுகள் ஆடும்பொழுது குரு மூலமாக பயிலவேண்டும். அங்க சுத்தத்தோடு, ஸௌஷ்டவம் கெடாமல், முகச் சேட்டைகள் இல்லாமல் மூன்று காலமேனும் பயிற்சி செய்யவேண்டும்.

## கோர்வை

பல அடவுகளின் சேர்க்கையே கோர்வை எனப்படும். இதனை ஒரு பூமாலைக்கு ஒப்பிடலாம். இது லயத்துடன் அமைந்திருத்தல் வேண்டும். பாத பேதங்களும், முத்திரைகள் பலவும் சேர்ந்து அமைந்ததே கோர்வை எனப்படும்.

கோர்வைகளை அமைக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1) பாட்டிற்கேற்ப தாளத்துடன் கோர்வைகள் அமைக்கப்படல் வேண்டும்.

2) கோர்வைகள் பாட்டின் வன்மை மென்மைக்கேற்ப அமைக்கப்படல் வேண்டும்.

3) கோர்வையின் இறுதியில் தீர்மானம் (மகுட அடவு) இடம்பெற வேண்டும்.

4) கோர்வை அமைக்கும் போது முதலில் விளம்ப காலத்தில் தொடங்கி படிப்படியாக மூன்றாம் (துரித) காலத்திற்கு கூட்ட வேண்டும்.

5) கோர்வை செய்யும் போது கைகளில் நளினமும், கால்களில் அழுத்தமும் இருத்தல் வேண்டும்.

6) கோர்வையில் ஒரே அடவுகளை திரும்பத் திரும்பச் செய்யாமல் மாறி மாறி வரும்படி அமைக்க வேண்டும்.



# உருப்படிகளின் இலட்ஷணங்கள்

## அலாரிப்பு

அலாரிப்பு என்ற சொல்லை அலரு, அலரி, அலரிப்பூ, அலர் பூ, அல்லரிப்பு என்று பல வேறாகக் குறிப்பிடுவர். இது கடந்த (19ம்) நூற்றாண்டில் உருவாகிய ஓர் உருப்படி. அலாரிப்பு நிகழ்ச்சிகளில் ஆடப்படும் முதல் நடனமாகும். இதைக் கடவுள் வழிபாடு என்றும், கச்சேரியின் துவக்கத்தில் சூடு பிடிக்க ஆடப்படும் நடனம் என்றும் கூறுவர். தலைக்கு மேல் அஞ்சலி ஹஸ்தத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்நடனம் கடவுள், குரு, சபை ஆகியோருக்கு வந்தனம் கூறுவதாக அமைந்துள்ளது.

"தா தெய் தெய்யும் தத் தாம் கிடதக" என்று ஆரம்பித்து "தாம் தித்தாம் தெய் தத்தெய்" என்று தொடரும் சொற்றொடர் மூன்று காலங்களில் தொடர்ந்து முழுமையாக மூன்று முறை உச்சரிக்கப்படும். இதற்கு முதலில் நின்றும், பின் அமர்ந்தும், இறுதியில் நகர்ந்தும் ஆடவேண்டும். அஞ்சலி கைகளுடன் கழுத்தாட்டல், பின்பு தோளை அசைத்தல், கைகளை அசைத்தல், முழங்காலை வளைத்தல், பாதங்களை உபயோகித்தல் என்று படிப்படியாக நடன அசைவுகள் இந் நடனத்தில் மலர்வதைக் காணலாம்.

அலாரிப்பு துளிர்விட்டு மெல்ல மலரும் நடனமாக விளங்குகிறது. இதனை சிலர் அப்பியாச நடனம் என்பர். ஆனால் செய்யப்பட வேண்டிய முறையில் செய்தால் அலாரிப்பு மிகவும் அழகாக இருக்கும். அங்க பிரத்தியாங்க, உபாங்கங்கள் அனைத்திற்கும் இதில் வேலையுண்டு. இது தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய தூய நிருத்த உருப்படியாகும். இவ்வலாரிப்பு நாட்டை இராகத்தில் பாடப்படும். இதனை திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீரணம் ஆகிய ஐந்து ஜாதிகளிலும் செய்யலாம்.

## ஜதிஸ்வரம்

அலாரிப்பைப் போல இதுவும் நிருத்த வகையைச் சேர்ந்த உருப்படியாகும். ஸ்வரங்களையே தாதுவாகவும், மாதுவாகவும் கொண்டுள்ளது. ஒரு பல்லவிக்கு பல வின்யாஸங்கள் செய்து ஆடப்படவேண்டும். ஸ்வரங்களுக்கு ஏற்றவாறு ஜதிக்கோர்வைகள் அமைக்கப்பெறுவதால் ஜதிஸ்வரம் என்ற பெயர் இடம்பெற்றிருக்கிறது. முதலில் ஸ்வரத்துடன் ஆரம்பித்து ஆடி, பிறகு சிறு ஜதியும் தீர்மானமுமாகத் தொடரும். தீர்மானம் என்பது சில அடவுகளைக் கொண்டு ஒரு தாளத்தில் கற்பனையுடன் சேர்க்கப்பட்ட கோர்வையாகும். ஒரு ஜதிஸ்வரத்தில் மூன்று முதல் நான்கு ஸ்வரங்கள் வரை அமைந்திருக்கும். அதாவது, பல்லவி, அனுபல்லவி, சரணம் போல மூன்று அமைப்புடன் இருக்கும். ஆனால் பாடல்கள் இருப்பதில்லை. பல இராகங்களிலும், தாளங்களிலும் ஜதிஸ்வரங்கள் கையாளப்பட்டு வருகின்றன. ஜதிஸ்வரங்களில் சாஹித்யம் சேர்க்கப்பட்டிருந்தால் அதனை ஸ்வரஜதி என்று அழைப்பதுண்டு. முதலில் மெய்யடவுடன் ஆரம்பிக்கும் இந்நடனத்தை கீத அநுஸரி நிருத்தம் எனவும் பலர் கூறுவர்.



# சங்கீதம் எழுதும் முறையில் உபயோகிக்கப்படும் குறியீடுகள்

## 1. காலப்பிரமாணத்தைக் காட்டுவது :-

1. முதலாம் காலம் (விளம்ப காலம்) - ஸரிகமபதநிஸ (ஒரு அடையாளமும் இல்லாதிருத்தல்)

2. இரண்டாம் காலம் (மத்திம காலம்) - ஸரிகமபதநிஸ (ஸ்வரங்களின் மேலே ஒரு கோடு மட்டும் இடல்)

3. மூன்றாம் காலம் (துரித காலம்) - ஸரிகமபதநிஸ (ஸ்வரங்களின் மேலே இரண்டு கோடுகள் மட்டும் இடல்)

## 2. ஸ்தாயியைக் காட்டுவது :-

1. கீழ் ஸ்தாயி (மந்த்ர ஸ்தாயி) - ஸ ரி க ம ப த நி ஸ (ஸ்வரங்களின் கீழ் புள்ளி இடல்)

2. மத்திம ஸ்தாயி - ஸ ரி க ம ப த நி ஸ (புள்ளி ஒன்றும் இடாதிருத்தல்)

3. மேல் ஸ்தாயி (தார ஸ்தாயி) - ஸ ரி க ம ப த நி ஸ (ஸ்வரங்களின் மேலே புள்ளி இடல்)

## 3. திரியாங்கத்தைக் காட்டுவது :-

1. அனுத்ருதம் - U (ஒரு தட்டு மட்டும் உண்டு)

2. த்ருதம் - O (ஒரு தட்டும் வீச்சும் உண்டு)

3. லகு - | (ஒரு தட்டும் விரல் எண்ணிக்கையும் உண்டு)

## 4. ஏனையவை :-

1. குறில் ஸ்வரம் - ஸ, ரி, க, ம (ஒரு அட்சரம்)

2. நெடில் ஸ்வரம் - ஸா; ரீ; கா; மா (இரு அட்சரம்)

3. ஆவர்த்தன முடிவு - //

4. அங்க முடிவு - /

5. அன்னிய ஸ்வரக் குறியீடு - *

6. கமகம் / அசைவுக்குறி - 〰

# அரங்க தேவதா ஸ்துதி

## சமஸ்கிருதம்

**பரதகுல பாக்ய கலிகே! பாவரஸானந்த**
**பரிணதாகாரே! ஜகதேக மோஹன**
**கலே! ஜய ஜய ரங்காதி**
**தேவதே தேவி.**

## தமிழ்

**பரதகுல பாக்கியமே! பாவரஸானந்தத்து**
**உருவாய் எழுந்த ஒளியே! - மருவுகன்**
**மோகனமே! இன்பமுதலே! அரங்கநிலை**
**ஆக வந்த அம்மை எனை ஆள்.**

கருத்து :-

*பரத குலத்திற்கு முத்துப் போன்றவளே, பாவம், ரஸம் இவைகளால் ஏற்படக்கூடிய ஆனந்த சொரூபமானவளே, உலகத்தை எல்லாம் போகிக்கச் செய்யும் கலையாக இருக்கின்ற அரங்க தேவதையுமான கலைவாணியே ஜயம் உண்டாகட்டும்.*

# புஷ்பாஞ்சலி

**விக்னானாம் நாஷனம் கர்த்தும் பூதானாம் ரக்ஷனாயச /**
**தேவானாம் துஷ்டயேசாபி ப்ரேக்ஷகானாம் விபூதயே //**
**ஸ்நேயஸே நாயகஸ்யாத்ர பாத்திரஸம் ரக்ஷனாயச /**
**ஆச்சார்ய ஷிக்ஷா சித்யர்த்தம் புஷ்பாஞ்சலி மதாரபேத் /**

**கருத்து :-**

*இடையூறுகளைத் தடுப்பதற்காகவும், உயிர்களைப் பாது காப்பதற்காகவும், தேவர்களை சந்தோஷப்படுத்துவதற்காகவும், பார்வையாளர்களின் நன்மைக்காகவும், தலைவரின் மேன்மைக்காகவும், ஆடுபவரின் பாதுகாப்பிற்காகவும், குரு கற்பித்த வித்தைகள் சித்தி அடைவதற்காகவும் மலர்களால் பூஜை செய்கின்றோம்.*



# தாம் 1

## செய்முறை

# பந்தனை நல்லூர் பாணியிலான அடவு விபரம்

| அடவு | சொற்கட்டு | தாளம் |
|---|---|---|
| நட்டடவு (8) | | |
| 1வது, 2வது | தெய்யா தெய் | ஆதி |
| 3வது | தெய்யா தெய்யா தெய் | ரூபகம் |
| 4வது | தெய்யா தெய்யா தெய்யா தெய் | ஆதி |
| 5வது | தெய்யா தெய்யா தெய் தெய் தாம் | ஆதி |
| 6வது | தெய் தெய் தாம் தெய் தெய் தாம் | ஆதி |
| 7வது | தெய் தெய் தத் தத் தெய் தெய் தாம் | ஆதி |
| 8வது | தெய் தெய் தெய் தெய் தித் தித் தெய் | ரூபகம் |
| நாட்டடவு (8) | தெய்யும் தத்த தெய்யும் தாம் | ஆதி |
| பரவல் அடவு (4) | தாதெய் தெய்த தித்தெய் தெய்த | ஆதி |
| குதித்து மெட்டடவு (4) | தெய் ஹத் தெய் ஹி | ஆதி |
| சாரிகா அடவு (4) | தெய் யா தெய் யீ | ஆதி |
| கோர்வை அடவு (6) | | |
| 1வது, 2வது, 3வது, 6வது | தத் தெய் தாம் தித் தெய் தாம்<br>தத் தெய் தாம் தித் தெய் தாம் | ஆதி |
| 4வது, 5வது | தத் தெய் தாம் தித் தெய் தாம்<br>தத் தெய் தாம் தித் தித் தெய் | ஆதி |
| மண்டியடவு (4) | தாங்கிடு தத்தத் தின்ன | ரூபகம் |
| குத்தடவு (4) | | |
| 1வது | தத் தெய் தா ஹா தித் தெய் தா ஹா | ரூபகம் |
| 2வது, 3வது, 4வது | தத் தெய் தா ஹா தித் தெய் தா ஹா | ஆதி |
| பாய்ச்சல் அடவு (3) | தித்தெய்ந்த தாதெய் | ஆதி |
| நீட்டல் அடவு (3) | தெய் தெய் தத்தா<br>தித் தெய் தத்தா | ஆதி |

| | | |
|---|---|---|
| கர்த்தரி அடவு (1) | தித்தெய்ந்த தாதெய் | ஆதி |
| சறுக்கல் அடவு (1) | தாங்கிடு தத்தத் தின்ன | ரூபகம் |
| உத்ஸங்க அடவு (1) | தெய் யா தெய் யீ | ஆதி |
| தித்தித் தெய் அடவு (2) | தித் தித் தெய் | ஆதி |
| தெய் தெய் தித்தித் தெய் அடவு (1) | தெய் தெய் தித்தித் தெய் | ஆதி |
| தெய் தெய் தித்தித் தெய் தா அடவு (1) | தெய் தெய் தித்தித் தெய் தா<br>(தா ஹத ஜெம் தரி தா) | ரூபகம் |
| மகுட அடவு / தீர்மான அடவு (2)<br>1வது<br><br><br>2வது | <br>ததிங்கிணதொம்<br>தக ததிங்கிணதொம்<br>தகதிகு ததிங்கிணதொம்<br>கிடதக தரிகிட தொம்<br>தக் கிடதக தரிகிட தொம்<br>தக திகு கிடதக தரிகிட தொம் | <br>ரூபகம்<br><br><br>ரூபகம் |
| தட்டு மெட்டடவு / பஞ்ச நடை (5)<br>திஸ்ரம்<br>சதுஸ்ரம்<br>கண்டம்<br>மிஸ்ரம்<br>சங்கீரணம் | <br>தகிட<br>தகதிமி<br>தகதகிட<br>தகிட தகதிமி<br>தக தகிட தகதிமி | |



# அடவுகளின் தாள அட்டவணை

அடவு :- தட்டடவு 1வது, 2வது தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | தெய்;யா தெய்,; | |
| | தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; |
| | | தெய்,யா தெய்,; // |
| **3ம் காலம்** | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | | |
| தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; | |
| | தெய்,யா தெய்,; | |
| | தெய்,யா தெய்,; | |
| | தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; |
| | | தெய்,யா தெய்,; |
| | | தெய்,யா தெய்,; |
| | | தெய்,யா தெய்,; // |

அடவு :- தட்டடவு 3வது தாளம் :- ரூபகம்

| 0 | $1_4$ |
|---|---|
| **1ம் காலம்** | |
| தெய்,யா தெய்,யா | தெய்,; தெய்,யா தெய்,யா தெய்,; // |
| **2ம் காலம்** | |
| தெய்,யா தெய்,யா | |
| தெய்,; தெய்,யா | தெய,யா தெய்,; தெய்,யா தெய்,யா |
| | தெய்,; தெய்,யா தெய்,யா தெய்,; // |
| **3ம் காலம்** | |
| தெய்,யா தெய்,யா | |
| தெய்,; தெய்,யா | |
| தெய்,யா தெய்,; | |
| தெய்,யா தெய்,யா | தெய்,; தெய்,யா தெய்,யா தெய்,; |
| | தெய்,யா தெய்;யா தெய்,; தெய்,யா |
| | தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,யா |
| | தெய்.; தெய்,யா தெய்,யா தெய்,; // |

அடவு :- தட்டடவு 4வது

தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா | தெய்,யா தெய்,; // |
| **2ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,; // |
| **3ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,;<br>தெய்,யா தெய்,யா<br>தெய்,யா தெய்,; // |

அடவு :- தட்டடவு 5வது

தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்; | தெய்,யா தெய்,யா | தெய்,தெய், தாம்; // |
| **2ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்; | தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்; | தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்; // |
| **3ம் காலம்**<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா தெய்,தெய், தாம்; | தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்; | தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்;<br>தெய்,யா தெய்,யா<br>தெய்,தெய், தாம்; // |

**அடவு :- தட்டடவு 6வது** **தாளம் :- ஆதி**

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; | தாம்; ; ; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; | |
| | தாம்; ; ; | தெய்,; தெய்,; |
| **3ம் காலம்** | | தாம்; ; ; // |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; | |
| | தாம்; ; ; | |
| | தெய்,; தெய்,; | |
| | தாம்; ; ; | தெய்,; தெய்,; |
| | | தாம்; ; ; |
| | | தெய்,; தெய்,; |
| | | தாம்; ; ; // |

**அடவு :- தட்டடவு 7வது** **தாளம் :- ஆதி**

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,; தெய்,; தத்,; தத்,; | தெய்,; தெய்,; | தாம்; ; ; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,; தெய்,; தத்,; தத்,; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; | |
| | தத்,; தத்,; | தெய்,; தெய்,; |
| | | தாம்; ; ; // |
| **3ம் காலம்** | | |
| தெய்,; தெய்,; தத்,; தத்,; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | | |
| தெய்,; தெய்,; தத்,; தத்,; | | |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; | |
| | தத்,; தத்,; | |
| | தெய்,; தெய்,; | |
| | தாம்; ; ; | தெய்,; தெய்,; |
| | | தத்,; தத்,; |
| | | தெய்,; தெய்,; |
| | | தாம்; ; ; // |

அடவு :- தட்டடவு 8வது

தாளம் :- ரூபகம்

| 0 | $1_4$ |
|---|---|
| **1ம் காலம்** | |
| தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; தித்,தித், தெய்,; // |
| **2ம் காலம்** | |
| தெய்,; தெய்,; | |
| தெய்,; தெய்,; | தித்,தித், தெய்,; தெய்,; தெய்,;<br>தெய்,; தெய்,; தித்,தித், தெய்,; // |
| **3ம் காலம்** | |
| தெய்,; தெய்,; | |
| தெய்,; தெய்,; | |
| தித்,தித், தெய்,; | |
| தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; தித்,தித், தெய்,;<br>தெய்,; தெய்,; தெய்,; தெய்,;<br>தித்,தித், தெய்,; தெய்,; தெய்,;<br>தெய்,; தெய்,; தித்,தித், தெய்,; // |

அடவு :- நாட்டடவு

தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | தெய்,யும், தத்,தத், | தெய்,யும், தாம்; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்; | தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்; // |
| **3ம் காலம்** | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | | |
| தெய்,யும், தத்,தத், தெய்,யும், தாம்; | தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்;<br>தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்; | தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்;<br>தெய்,யும், தத்,தத்,<br>தெய்,யும், தாம்; // |

அடவு :- பரவல் அடவு

தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தா; தெய்,; தெய்,; த,; | தித்,; தெய்,; | தெய்,; த,; // |
| **2ம் காலம்** | | |
| தா; தெய்,; தெய்,; த,; | | |
| தித்,; தெய்,; தெய்,; த,; | தா; தெய்,; | |
| | தெய்,; த,; | தித்,; தெய்,; |
| **3ம் காலம்** | | தெய்,; த,; // |
| தா; தெய்,; தெய்,; த,; | | |
| தித்,; தெய்,; தெய்,; த,; | | |
| தா; தெய்,; தெய்,; த,; | | |
| தித்,; தெய்,; தெய்,; த,; | தா; தெய்,; | |
| | தெய்,; த,; | |
| | தித்,; தெய்,; | |
| | தெய்,; த,; | தா; தெய்,; |
| | | தெய்,; த,; |
| | | தித்,; தெய்,; |
| | | தெய்,; த,; // |

அடவு :- குதித்து மெட்டடவு

தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | தெய்,; ஹத்,; | தெய்,; ஹி,; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | | |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | தெய்,; ஹத்,; | |
| | தெய்,; ஹி,; | தெய்,; ஹத்,; |
| **3ம் காலம்** | | தெய்,; ஹி,; // |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | | |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | | |
| தெய்,; ஹத்,; தெய்,; ஹி,; | | |
| தெய்,; ஹத்.. தெய்,; ஹி,; | தெய்,; ஹத்,; | |
| | தெய்,; ஹி,; | |
| | தெய்,; ஹத்,; | |
| | தெய்,; ஹி,; | தெய்,; ஹத்,; |
| | | தெய்,; ஹி,; |
| | | தெய்,; ஹத்,; |
| | | தெய்,; ஹி,; // |

அடவு :- சாரிகா அடவு, உத்ஸங்க அடவு — தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தெய்,; யா; தெய்,; யீ ; | தெய்,; யா; | தெய்,; யீ ; // |
| **2ம் காலம்** | | |
| தெய்,; யா; தெய்,; யீ ;<br>தெய்,; யா; தெய்,; யீ ; | தெய்,; யா;<br>தெய்,; யீ ; | தெய்,; யா;<br>தெய்,; யீ ; // |
| **3ம் காலம்** | | |
| தெய்,; யா; தெய்,; யீ ;<br>தெய்,; யா; தெய்,; யீ ;<br>தெய்,; யா; தெய்,; யீ ;<br>தெய்,; யா; தெய்,; யீ ; | தெய்,; யா;<br>தெய்,; யா;<br>தெய்,; யா;<br>தெய்,; யா; | தெய்,; யீ,;<br>தெய்,; யீ,;<br>தெய்,; யீ,;<br>தெய்,; யீ,; // |

அடவு :- கோர்வை அடவு — தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ம் காலம்** | | |
| தத்,; தெய்,; தாம்; ; ; | தித்,; தெய்,; | தாம்; ; ; // |
| **2ம் காலம்** | | |
| தத்,; தெய்,; தாம்; ; ;<br>தித்,; தெய்,; தாம்; ; ; | தத்,; தெய்,;<br>தாம்; ; ; | தித்,; தெய்,;<br>தாம்; ; ; // |
| **3ம் காலம்** | | |
| தத்,; தெய்,; தாம்; ; ;<br>தித்,; தெய்,; தாம்; ; ;<br>தத்,; தெய்,; தாம்; ; ;<br>தித்,; தெய்,; தாம்; ; ; | தத்,; தெய்,;<br>தாம்; ; ;<br>தித்,; தெய்,;<br>தாம்; ; ; | தத்,; தெய்,;<br>தாம்; ; ;<br>தித்,; தெய்,;<br>தாம்; ; ; // |

**அடவு :- மண்டியடவு, சறுக்கல் அடவு** **தாளம் :- ரூபகம்**

| 0 | $1_4$ |
| --- | --- |
| **1ம் காலம்** | |
| தாங்கிடு தத்,தத், | தின்,ன, தாங்கிடு தத்,தத், தின்,ன, // |
| **2ம் காலம்** | |
| தாங்கிடு தத்,தத், | |
| தின்,ன, தாங்கிடு | தத்,தத், தின்,ன, தாங்கிடு தத்,தத், |
| | தின்,ன, தாங்கிடு தத்,தத், தின்,ன, // |
| **3ம் காலம்** | |
| தாங்கிடு தத்,தத், | |
| தின்,ன, தாங்கிடு | |
| தத்,தத், தின்,ன, | |
| தாங்கிடு தத்,தத், | தின்,ன, தாங்கிடு தத்,தத், தின்,ன, |
| | தாங்கிடு தத்,தத், தின்,ன, தாங்கிடு |
